அழகுசாதன, அன்பளிப்பு விளையாட்டு, பிளாஸ்ரிக் பொருள்களையும் மணிக்கூடு றேடியோ பொலித்தீன் வகைகளையும் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஜெயா
அழகு மாடம்
187, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

றேடியோ, மணிக்கூடு பொலித்தீன் வகைகளையும் அழகுசாதன, அன்பளிப்பு விளையாட்டு, பிளாஸ்ரிக் பொருள்களையும் உதிரியாகப் பெற்றுக்கொள்ள
ஜெயா
அழகு மாடம்
177 A, இராசன் தெரு.
யாழ்ப்பாணம்.
(சி/1153)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 23 சனிக்கிழமை (06 - 05 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 160

# இப்போதைக்கு அரசு புலிகளுடன் பேசாது

# ராணுவ நடவடிக்கையை விட வழி இல்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 6

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை தற்போதைய நிலையில் அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்க மாட்டாது. விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டுள்ள தாக்குதல்களுக்கு இராணுவ ரீதியில் பதில் அளிப்பதைத் தவிர அரசுக்கு வேறுவழி இல்லை.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரும், வெளிநாட்டு வர்த்தகம், நீதி, அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைக்கு பேச்சுக்கள் நடத்தும் சாத்தியம் இல்லாவிட்டாலும் விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபட்டு வரும் என்றும் அமைச்சர் கூறினார்.

வேறு நாடுகளிடமிருந்து இராணுவ உதவி எதனையும் இலங்கை நாடியிருக்கிறதா அல்லது பெற்றிருக்கிறதா என்ற கேள்விக்கு பதில் அளிக்க அமைச்சர் பீரிஸ் மறுத்துவிட்டார்.

அரசின் இராணுவ நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டா.

புலிகள் இயக்கத்தைச் சேர்த்தோ அல்லது அந்த இயக்கம் இல்லாமலோ அரசு தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உறுதியாகக் கூறியுள்ளார் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

ஏப்ரல் 19 ஆம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பான செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க அமைச்சர் பீரிஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு முகாம்கள் குறித்து தெற்கில் பரவும் வதந்திகள்

### மக்கள் மத்தியில் பதற்றநிலை

கொழும்பு, மே 6

வட பகுதியில் உள்ள இராணுவ முகாம்களின் 'தலைவிதி' குறித்து தென்பகுதியில் அடிக்கடி பரப்பப்படும் வதந்திகளால் மக்கள் மத்தியில் பதற்றம் உருவாகி வருவதாக பி.பி.ஸியின் கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள நிலைமை பயங்கரமானது என்பதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது.

மூடப்பட்ட கதவுகளுக்கு பின்னால் உயர்மட்ட படை அதிகாரிகள் நாள் பூராவும் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர். கிழக்கில் தமிழர்களை பழிவாங்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக தமிழ் அரசியல்வாதிகள் மூலம் அறியமுடிகிறது.

— இவ்வாறு பி. பி. ஸி. தெரிவித்தது. (ஐ-6)

## 8 ஆயிரம் ஆசிரியர் நியமனம்

இந்த வருடம் 8 ஆயிரம் ஆசிரியர்கள் புதிதாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

ஏற்கெனவே 4 ஆயிரத்து 532 ஆசிரியர்களைச் சேர்க்க அனுமதி அளிக்கப்பட்டது.

இதற்கு புறம்பாக 3 ஆயிரத்து 470 ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-3)

## 'ஹபரண' நாளை வரும்

யாழ்ப்பாணம், மே 6

திருகோணமலை பிறிமா ஆலையில் இருந்து ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு 'ஹபரண' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை — பருத்தித்துறையில் மண்ணெண்ணெய் இறக்கும் பணியில் ஈடுபட்ட "மாஹா" கப்பல் அவற்றை இறக்கி முடித்து நேற்றுக் கொழும்பு திரும்பியது.

நிவாரண பொருள்களுடன் வந்த லங்கா முதித தொடர்ந்தும் காங்கேசன்துறையில் தரித்து நிற்கிறது. 'லங்கா கல்யாணி', 'சோமாரி' கப்பல்களில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் கொழும்பில் நடந்து வருவதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது. (இ-3-4-7)

## பல ரக ஏவுகணைகள் புலிகள் வசம் உள்ளன?

### கொழும்பு பத்திரிகை தகவல்

கொழும்பு, மே. 6

மூன்று கிலோ மீற்றர் வரை செல்லக்கூடிய இடம்விட்டு இடம் பாயும் ஏவுகணைகள் உட்பட பல ரகங்களைச் சேர்ந்த ஏவுகணைகள் விடுதலைப் புலிகள் வசம் இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இது குறித்து உயர் இராணுவ அதிகாரியிடம் கேட்டபோது, தங்கள் புலனாய்வு அறிக்கைகளில் இத்தகைய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் —

புலிகளிடம் தரையிலிருந்து தரைக்குப் பாயும் ஏவுகணைகள் இருப்பதாகக் கூறப்படுவது மிகைப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்றும் — கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-14)

## பல கட்ட தாக்குதல்களை நடத்த ராணுவம் திட்டம்

கொழும்பு, மே 6

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல கட்டத் தாக்குதல்களை நடத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. இத்தாக்குதல்கள் எப்போது, எங்கு நடத்தப்படும் என்பது குறித்து இப்போது கூற முடியாது என்றும் —

நீண்ட காலம், குறுகிய காலம் எனப் பல கட்ட இராணுவ நடவடிக்கைகளாக அது மேற்கொள்ளப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் முனசிங்கா கூறியுள்ளார்.

புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளில் சில ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

### முச்சந்தி முனி



எத்தனை திட்டங்கள் போட்டாலும் கூட்டிக் கழித்தால் வைசபர்தான் பாருங்கோ... !

## விமானங்களை சுட்டு வீழ்த்தியது மூலம் புலிகள் ராணுவ சமநிலை பெற்றுள்ளனர்

லண்டன், மே 6

''இலங்கையில் விடுதலைப் புலிகள் இராணுவ விமானங்களை சுட்டு வீழ்த்தும் வல்லமை தமக்கு இருக்கிறது என்பதை காட்டியதன் மூலம் தமிழர் பிரச்சினை குறித்த விஷயத்தில் இராணுவ சமநிலையை வியத்தகு முறையில் திடீரென ஏற்படுத்தி உள்ளனர். புதிய பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்பதை ஒரு வாரகாலம் கழிந்தும் அரசு இன்னமும் தெளிவாக்கவில்லை''

பி பி ஸியின் இலங்கை பற்றிய கண்ணோட்டத்தில் அதன் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய நிலைமை மிகவும் கவலைக்குரியது என்று அரசு கருதுகிறது என்பதில் ஐயமேயில்லை என்றும் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். (இ-3)

## பரீட்சைத் திணைக்களம் சென்ற 5 தமிழர்கள் கைது!

கொழும்பு. மே 6

கொழும்பு மலே வீதியில் உள்ள பரீட்சை திணைக்களத்தில் வைத்து ஐந்து தமிழர்களை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று ''தினமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் பாதுகாப்பு பொலீஸார் இவர்களை கைது செய்து கொம்பனித் தெரு பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட சமயம் இவர்களில் மூவர் பரீட்சைத் திணைக்களத்துக்கு உள்ளேயும், ஏனைய இருவரும் நுழைவாயிலுக்கு அருகிலும் காணப்பட்டனராம்.

அருகில் உள்ள விமானப் படைத் தலைமையகத்திற்குள் ஊடுருவுவதற்காக அல்லது வேறு நோக்கத்துக்காக இவர்கள் அங்கு வந்துள்ளனர் என பொலீஸார் சந்தேகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான தர்மலிங்கம் என்பவர் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்றும் —

அவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

### கொழும்பு - வவுனியா இரவு ரயிலில்

## பயணிகள் உடைமைகள் தந்திரமாகத் திருட்டு

கொழும்பு மே 6

கொழும்பில் இருந்து இரவு ரயிலில் வவுனியா செல்லும் பயணிகளின் உடைமைகள் தந்திரமாகத் திருடப்படும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மயக்க மருந்து கலக்கப் பட்ட உணவு வகைகளை பயணிகளிடம் கொடுத்து அதை உண்ண வைத்த பின்னர் அவர்கள் மயக்கமுற்ற நிலையில் இருக்கும்போது அவர்களிடம் இருந்து பெறுமதியான பொருள்களைத் திருடும் கும்பல்கள் பற்றி முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இரவு ரயிலில் வவுனியா சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு சக பயணி ஒருவரால் ''டொபி'' ஒன்று வழங்கப்பட்டது. அதனைச் சுவைத்து உண்ட சிப்பாய் சிறிது நேரத்தில் மயக்கமடைந்தார். அவ்வளவுதான். அவரிடம் இருந்த தங்கச் சங்கிலி, மோதிரம், மணிக்கூடு மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன மாயமாய் மறைந்தன.

இதுபோன்று மற்றொரு தமிழ் பயணிக்கு ஒருவர் கடலைகளைக் கொடுத்து அவரை மயக்கியபின் அவரிடமிருந்த 1,200 ரூபா பணத்தையும் மோதிரத்தையும் திருடியுள்ளார்.

இது போன்ற பல சம்பவங்கள் குறித்து பயணிகள் பலர் தினமும் முறைப்பாடு செய்து வருகின்றனர். (ஐ-10)

### யாழ் மருத்துவ பீடத்தில் நேற்று

## விரிவுரையாளரை வெளியே விட்டு வாயிலை மூடி மாணவர் பகிஷ்கரிப்பு!

யாழ்ப்பாணம், மே. 6

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை உள்ளே செல்லவிடாது பிரதான நுழைவாயிலை மூடி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் மருத்துவ பீடத்தில் நேற்று விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை.

இதனை அடுத்து —

மருத்துவ பீட மாணவர்கள் தங்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பொது மன்னிப்பு கோரும் வரை விரிவுரைகளை ஆரம்பிப்பதில்லைஎன துணைவேந்தர் தலைமையில் நேற்று நடைபெற்ற அவசர கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக தெரியவந்தது.

மருத்துவ பீட மாணவர்களுக்கு யாழ். போதனா

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### ஏவுகணைகளை எதிர்கொள்ளும்

## நவீன ஆயுதங்கள் வழங்க இரு நாடுகள் முன்வந்தன

### கொழும்பில் அந்தரங்க பேச்சு

கொழும்பு, மே. 6

போர்த் தளபாடங்களை உற்பத்தி செய்வதில் முன்னணி வகிக்கும் இரண்டு நாடுகள், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு நவீன ஆயுதங்களை வழங்கி உதவுவதற்கு முன்வந்துள்ளதாகத் [illegible] கிறது.

இந்த இரு நாடுகளினதும் மூத்த ராஜதந்திரிகள் கொழும்பில் இரண்டொரு நாள்களுக்கு முன்னர் முக்கிய அமைச்சர் ஒருவருடன் இது குறித்து கலந்துரையாடிய [illegible] ஒரு நாட்டின் ராஜதந்திரி [illegible]

மற்ற நாட்டின் ராஜதந்திரி இரண்டு மணித்தியாலங்களும் குறிப்பிட்ட அமைச்சருடன் பேசியதாக ''தஐலண்ட்'' செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை

யாழ்ப்பாணம், மே 6

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக மழையும் மந்தாரமுமான சீரற்ற காலநிலை நிலவுகிறது. நேற்று அதிகாலை 3 மணி முதல் சுமார் ஒருமணி நேரம் பெய்த பலத்த மழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 79 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பதிவாகியுள்ளது.

நேற்று முழுநாளும் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. இடையிடையே சிறுமழை பெய்தது.

அண்மைய ஆண்டுகளில் மே மாதத்தில் இதுபோன்ற காலநிலை நிலவியதில்லை என்று வானிலை அவதானிகள் கூறுகின்றனர். (ஐ-4)

### பல்கலை வெட்டுப்புள்ளி பாதிப்பு

## உண்ணாவிரதம் இருக்க வவுனியா மாணவர் திட்டம்

கொழும்பு, மே. 6

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்ட மாணவர்கள் நிவாரணம் கோரி சாகும்வரையிலான உண்ணாவிரதம் ஆரம்பிக்க திட்டமிட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது பாதிப்பு குறித்து கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுக்குத் தாம் 30க்கு மேற்பட்ட கடிதங்களை அனுப்பிவைத்த போதும் இதுவரை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் —

பின்னர் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து தமது நிலைமையை எடுத்து விளக்கியதாகவும், ஆனால் அதன்பின்பும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தமக்கு நியாயம் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டீர்களா?

ஆனைக்கோட்டை, ஆலடியில் வசித்துவரும் என்னுடைய பட்டிப் பசு மாடு - நிறம் -மாவெள்ளை, குறி இல்லை. அழகிய பெரிய பசு, கடந்த 3 ஆம் திகதி முதல் காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும். சன்மானம் தருவோம். விலாசம்: சி. இராஜசிங்கம், 'கவிதை' ஆலடி, ஆனைக்கோட்டை.

(36544)



ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் சகல பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும்,

## விசேட பொதுக் கூட்டம்

## 14 - 05 - 1995

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 14 - 05 - 95 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 00 மணிக்கு சங்கப்பணிமனையில் (பி எஸ் சேவிஸ் நிலையம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்) சங்கத்தலைவர் திரு. தி சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது கூட்டத்திற்கு சமுகம் தந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். கூட்டத்துக்கான நிகழ்ச்சிநிரல் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதோர் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு அதனை செயலாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அனுப்பப்பட்ட நிகழ்ச்சிநிரல் தொடர்பாகவும், இணைக்கப்பட்ட விவரங்கள் தொடர்பாகவும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் காரியாலய நேரத்தில் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்.

ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம். [சி-1136]



## BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்

மீண்டும் ஒரு புதிய பிரிவு

**O/L DAY CLASS**

(எமது வழமையான ஆசிரிய குழுவினால்)

ஆரம்பம்: 08 – 05 – 95 திங்கள் காலை 8-00 மணி

**A\L - 97** கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்

ஆரம்பம்: 07 – 05 – 95 காலை 8-00 மணி

(சி-1363)


## கண்ணீர்ப் பூக்கள்

### சரவணமுத்து - விமலானந்தன்

(அப்பு)

(முன்னாள் நிர்வாக உறுப்பினர்
கலைமகள் சனசமூக நிலையம் - வேலணை)

நண்பனே !
சிரித்துச் — சிரித்து எம்மை
இன்பமூட்டினாய் ! நீயோ... !
ஒரு வார்த்தை கூடப் பேசாமல்...
காலனை அணைத்தாயோ?
இயமன் — கயிற்றுடன்... வருவது... !
தெரிந்திருந்தால்....
உன் நண்பர்கள்... நாம்...
காலனுடன் மோதியிருப்போமே .. !
சொல்லாமல் உன் கதையை
முடித்தாயே?
உன் சிரிப்பை .. பேச்சை ..
இனி எப்போ காண்போம்?

உன் பிரிவால் துயருறும்
கலைமகள் சனசமூக நிலைய
உறுப்பினர்களும் — மக்களும்

வேலணை கிழக்கு. (36546)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 09 — 11 — 1933

இறைவன் அடியில்: 07 — 04 — 1995

### செல்வி திரேசா ஞானப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் புனித சாள்ஸ், மகாவித்தியாலயம்)

''சீவியத்தில் என்னை உள்ளன்புடன் நேசித்தவர்களே! எனது மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

இவரின் பிரிவால் பரிதவிக்கும்:
உறவினர்கள்

இல: 22, புதுமைமாதா கோவில்வீதி,
அன்னக்கடை,
யாழ்ப்பாணம், (3658)


## எடிசன் அக்கடமி

[யாழ். இந்து அருகில்]
411/1, K. K. S. Rd.
யாழ்ப்பாணம்.

[கொக்குவில் இந்து அருகில்]
27, K.K.S. Rd
கொக்குவில்

**O/L DAY CLASS**

புதிய 2 ஆம் பிரிவு

ஆரம்பம்:- 09 - 05 - 95 மு.ப. 8.30

★ எமது வழமையான திறமைமிகு ஆசிரியர் குழு.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

[சி/1159]


## தவறிவிட்டது

நேற்றுக் காலை கிளாலியில் இருந்து 'ஓட்டோவில்' யாழ்ப்பாணம் வரும்போது, சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ரூபா இருபத்திமூவாயிரம் ரொக்கமும், ''மூன்று சீல் பவுண்'' காசுகளும் அடங்கிய கைக்குட்டை 'முடிச்சு' தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளத்துடன் தந்து உதவவும். சன்மானம் தருவோம்.

விலாசம்:
கு. சந்திரன்
கிராமசேவையாளர்,
42, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் [36547]

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பொதுப் பட்டமளிப்பு - 1995-07-29

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி ஆகிய பட்டங்களை வழங்குவதற்காக 1995 - 07 - 29 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு விழா நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் (இடம்பெயர்ந்த மாணவர்கள் உட்பட) 1995 - 06 - 09 க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. முதுதத்துவமாணித் தேர்வு
2. முதுகலைமாணித் தேர்வு
3. முதுவிஞ்ஞானமாணித் தேர்வு
4. கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் தேர்வு
5. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித்தேர்வு
6. வணிகமாணித் தேர்வு
7. தொழில் நிர்வாகமாணித் தேர்வு
8. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு, பொது விஞ்ஞானமாணித் தேர்வு
9. சிறப்பு கலைமாணித் தேர்வு, பொதுக் கலைமாணித் தேர்வு
10. இசை / நாட்டியக்கலை டிப்ளோமாத் தேர்வு
11. சித்த வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு
12. விவசாய விஞ்ஞானமாணி

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விவரங்களையும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, 20 வாட் பிளேஸ், கொழும்பு 7 அல்லது யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், 154, ஆமர்பென்டல் வீதி, கொழும்பு, 13 ஆகியவற்றின் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

(சி-1153) பதிவாளர்


**97** அடுத்த புதிய பிரிவு

கலை, வர்த்தகம் வகுப்புகள்

ஆரம்பம்: இன்று 06 - 05 - 1995 காலை 8-00 மணி

✶ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ✶

| | | |
|---|---|---|
| பொருளியல் லோகசிங்கம் | தமிழ் குழந்தை | புவியியல் குணராஜா |
| வர்த்தகம் வரதன் | அளவையியல் விக்கி | இந்து சமயம் இந்து நாகரிகம் காரை. சுந்தரம் பிள்ளை |
| கணக்கியல் கலைச்செல்வன் | அரசியல் சீலன் | வரலாறு பிரகலாதன் |
| கிறிஸ்தவம் வசந்தன் | நாடகமும் அரங்கியலும் சத்தியா | |

## விக்னா கல்வி நிறுவனம்

52, [illegible] யாழ்ப்பாணம். [சி-1360]


# எமது தேசியக் கலை வடிவமான நாட்டுக்கூத்தை பேண வேண்டும்

### நூல் வெளியீட்டுவிழாவில் உரை

குருநகர், மே 6

''நாட்டுக்கூத்து எமது தேசியக் கலை வடிவம். அதனைப் பேணவேண்டிய கடப்பாடு எமக்குண்டு''. பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

கடந்த 29 ஆம் திகதி மாலை பாஷையூர் பங்கு மண்டபத்தில் நடைபெற்ற ''இம்மனுவல்'' நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு வைபவத்தில் அறிமுகவுரை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை வண. ஜெயக்குமார் அடிகள் தலைமையில் விழா நடைபெற்றது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''எமது மண்ணுக்கு வந்த மிசனரிமார் நாட்டுக் கூத்துக்களைப் பயன்படுத்தியே கத்தோலிக்க மத போதனைகளை மக்கள் மத்தியில் விதைத்து வெற்றி கண்டனர். ஆரம்ப காலத்தில் நாட்டுக் கூத்துக்கள் வாய்ச்சொற்களாகவே இருந்து வந்தன. பிற்பாடு ஏடு களில் கிறிஸ்தவர்களால் பொறிக்க, அச்சுவாகனமேற்றுகையிலேயே அவற்றின் தோற்றப்பாடுகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

நாட்டுக் கூத்துகள் நூலுருப் பெறும் வாய்ப்பு அறுபதுகளில் பேராசிரியர் அ. வித்தியானந்தனால் ஈழத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாட்டார் வழக்கியலுக்கு வளம் சேர்ப்பதாக புலவர் செகராசசிங்கம் இயற்றியுள்ள ''இம்மனுவல்'' நாட்டுக்கூத்து என்னும் இந்நூல் அமைந்துள்ளது என்று கூறினார்.

யாழ். ஆயர்மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி வைத்தார்.

'செஞ்சொற்கவிஞன்'' என்னும் பட்டமளித்து கௌரவித்த யாழ். பிரதேசசெயலர் திரு க. குணராஜா பேசுகையில்:

''நாம் பேசும் மொழியில் இலக்கியம் படைக்கப்பட வேண்டுமென்ற இந்நூலாசிரியரின் நோக்கத்தை இலக்கிய உலகம் வரவேற்கும்'' என்றார்.

பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம் அருள் பிலிப்பையா, ஏ. ஜே. அன்டர்சன் ஆகியோரும் பாராட்டுரை நிகழ்த்தினர்.

இறுதியாக பெண்கள் கலந்து கொண்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை அடுத்து ஆசிரியர் ஆ. மாட்டின் நன்றி தெரிவித்தார்.

(க-51)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

ஓய்வூதியர்களுக்கான மே மாத வவுச்சர்கள் இன்று தபாலகங்கள் மூலம் விநியோகிக்கப்படும் என்று பிரதம தபாலதிபர் திரு. செ. கோடிஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவால் இந்த வவுச்சர்கள் நேற்று பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(இ-3)

## தொழில் வங்கி 10 ஆம் திகதி பதிவு நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 6

தமிழீழ நிர்வாக சேவையின் மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்கும் தொழில் வங்கியின் முதற்கட்ட பதிவு வேலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் பதிவு வேலைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தமிழீழ நிர்வாக சேவையினர் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ஐ)

## நரோமா இன்று வந்து திரும்பும்

யாழ்ப்பாணம், மே 6

ஒரு தொகுதி பயணிகளுடன் திருமலையில் இருந்து புறப்பட்ட 'நரோமா' கப்பல் இன்று சனிக்கிழமை காலை பருத்தித் துறைக்கு வரவுள்ளது.

இக் கப்பலில் இங்கிருந்து பயணம் செய்ய பதிவு செய்த பயணிகள் அனைவரும் காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு மேலதிக மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ—4)

## மருத்துவம் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 6

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் மாதாந்த வெளியீடான ''மருத்துவம்'' சித்திரை மாத இதழ் இன்று வெளியிடப்படும். (ஐ—4)

## காணவில்லை

செல்வன்

### சண்முகராஜா கஜமுகன்

[கண்ணன்]



யாழ். ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த 16 வயது, பொது நிறமான செல்வன் சண்முகராஜா கஜமுகனையும் அவருடன் சேர்ந்து செல்வன் கனகரட்னம் கேதீஸ்வரன் (கேதீஸ்) (பொதுநிறம்) என்பவரையும் 25-4-95 முதல் காணவில்லை, இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரிக்கு உடன் அறியத்தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இல 303, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

ச. ராஜன்

(36542)

## தவறிவிட்டது

நேற்று மாலை பளையிலிருந்து சாவகச்சேரி வரும் வழியில் காரியாலய ஆவணங்கள் அடங்கிய கோப்பும் அடையாள அட்டை, வாகன அனுமதி அட்டை, மூக்குக் கண்ணாடி என்பவற்றோடு அலுவலகப் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளத்துடன் தந்துதவவும்.

முகவரி
வ. மகாலிங்கம்

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்
பளை

(36548)

### யாழ்ப்பாணம் மாவட்டக்

## கூட்டுறவுச் சபையின் அறிவித்தல்

10 - 05 - 1995 புதன்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெற இருந்த வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. அங்கத்துவ சங்கங்களிற்கு இது தொடர்பான அறிவித்தல் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மேற்படி பொதுக் கூட்டத்திற்கான திகதியும் நிகழ்ச்சி நிரலும் தங்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

செயலாளர்

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை
யாழ்ப்பாணம்.

(சி/1157)

## பிற்போடப்பட்டுள்ளது

மாதகல் நுணசை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் **6-5-95** சனிக்கிழமை மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடத்தப்படவிருந்த சாண்டோ துரைரத்தினத்தின் மாணவர்களின் வீர தீர நிகழ்ச்சிகளும் ஏனைய கலை நிகழ்ச்சிகளும் **13-5-95** சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளன.

[8424]

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பொன்னம்பலம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இந்தியாவில் வசித்துவந்தவருமான சுப்பிரமணியம் பொன்னம்பலம் அவர்கள் ஏப்ரல் 24 ஆம் திகதி காலமானார். இவர் கமலாவின் அன்புக் கணவரும், சுந்தரேஸ்வரன் [பிரான்ஸ்], வசந்தகுமார் [பிரான்ஸ்], புண்ணியமூர்த்தி, அப்பன், உதயன், இராசாத்தி, சாரதா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

தகவல்:
க. கனகரத்தினம்

[8523]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினரின் கெடுபிடி காரணமாக

# கொழும்பில் இருந்த மலையகதமிழர் தோட்டப் பகுதியை நாடும் நிலை!

கொழும்பு, மே. 6

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் தமிழர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை அடுத்து, அங்கு வேலையின் நிமித்தம் தங்கியிருந்த மலையகத் தமிழர்கள் தத்தமது தோட்டப் பகுதிகளுக்கு திரும்பிக் கொண்டு இருக்கின்றனர்.

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் இவர்கள் தமது வேலைத்தலங்களுக்கு சென்று வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே சமயம் இவர்கள் தங்குவதற்கு 'லொட்ஜ்' களிலும் இடம் மறுக்கப்படுகிறது.

தோட்டங்களில் போதிய வேலை நாள்கள் வழங்கப் படாமல், வருமானத்திற்கு கஷ்டம் ஏற்பட்டதால், தோட்டங்களில் இரண்டு, மூன்று மாத லீவு எடுத்து கொழும்பில் வேலை பார்த்து வந்தவர்களும் தோட்டங்களுக்கு திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு திரும்புபவர்களுக்கு வேலை செய்த நாள்களுக்குரிய சம்பளம் முழுமையாக வழங்கப்படவில்லை.

மீண்டும் வேலைக்கு வரும் போது மிகுதித் தொகை தரப்படும் என்று கொழும்பில் இவர்களது முதலாளிகள் தெரிவித்து விட்டனர்.

இந் நிலைமைகளால் இத் தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி உள்ளனர். (ஒ-5)

## சமாதானத்தை வலியுறுத்தி கம்பளையில் சுவரொட்டி

கொழும்பு, மே 6

சமாதானத்தை வலியுறுத்தும் வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் பல கம்பளை நகரப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன் இரவோடு இரவாக சிங்கள மொழியில் எழுதப்பட்ட சுவரொட்டிகள் இவ்வாறு ஒட்டப்பட்டிருந்தன.

''ஜனாதிபதி அவர்களே எமது எதிர்பார்ப்பு சமாதானமே'' ''இலங்கை மண்ணில் சமாதானம் நிலைக்கட்டும்''

''யுத்தத்துக்கு முடிவு வரட்டும் சமாதானம் உதயமாகட்டும்''

''சமாதானப் பூ மலரட்டும்'' என்ற வாசகங்கள் அந்தச் சுவரொட்டிகளில் சிங்கள மொழியில் காணப்பட்டன. (ஐ)

## வலி. மேற்கு மக்களுக்கு வீடமைப்பு கடன்வழங்க நிதி

வலிகாமம் மேற்கு மே 6

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு, வீடமைப்பு மானியம் வழங்கல், மற்றும் வீடமைப்பு கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்கென, யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நிதி வழங்கியுள்ளது.

வீடமைப்பு மானியம் வழங்குவதற்கு 72 ஆயிரம் ரூபாவும், வீடமைப்பு கடன் வழங்குவதற்கு 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் என மொத்தமாக 2 லட்சத்து 92 ஆயிரம் ரூபா நிதி இந்த ஆண்டுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இப் பிரதேசத்தில் உள்ள மாதாந்தம் 700 ரூபாவுக்கு குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற ஒன்பது குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் வீடமைப்பு மானியமாக 8 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதே போன்று, 700 ரூபாவுக்கு மேற்பட்ட மாதாந்த வருமானத்தைப் பெறுகின்ற பதினொரு குடும்பங்களுக்கு வீடமைப்பு கடனாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

வலி மேற்கு பிரதேச செயல் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்து இந்த மானியம் மற்றும் கடன்களை பெறுவதற்கு தகுதியானோரை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வைத்திய நிபுணர் நியமனம்

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரின் இடத்திற்கு, புதிதாக வேறொரு மகப்பேற்று வைத்திய நிபுணர் கடந்த முதலாம் திகதியில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகப்பேற்று நிபுணர் திரு. கருணாகரனே இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டவர் ஆவார். [ஐ 5-15]

## புலிகளின் குரல் வானொலியில்

06 — 05 — 1995

சனி இரவு

- ★ 8-02 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ''பாலை வனங்களின் அமைப்பு'' எனும் தலைப்பில் கலந்துரையாடுவோம்

07 — 05 — 1995

ஞாயிறு காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

சனி மாலை

- ★ 5-01 — சிந்தனை சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
- ★ 5 30 — அறிவியல் வினாடி வினாப்போட்டி
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — பாமாலை
- ★ 6-15 — என் தெரிவு

## உலக வங்கி தலைவர் காலமானார்

வாஷிங்டன் மே 6

உலக வங்கியின் தலைவர் திரு. லூயிஸ் பிரஷ்டின் (68 வயது) நேற்று முன் தினம் வாஷிங்டனில் அவரது இல்லத்தில் காலமானார்.

திரு. பிரஷ்டின் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். (ஒ)

## மட்டுவிலில் ப. நோ. கூ. ச. பேக்கரி

தென்மராட்சி, மே. 6

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தினரால் பேக்கரி ஒன்று மட்டுவிலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்க பொது முகாமையாளர் சி பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-117)

## ஆயுதங்களுடன் வந்த 4 பேர் பஸ் டிப்போவில் கொள்ளை

கொழும்பு, மே. 6

நாலு பேர் கொண்ட குழு ஒன்று துப்பாக்கிகள் மற்றும் கத்திகளைக் காட்டிப் பயமுறுத்தி சுமார் 80 ஆயிரம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச் சம்பவம் கடந்த மே தினத்தன்று அதிகாலை ஒரு மணியளவில் அம்பலாந்தோட்ட சிதரகல பஸ் டிப்போவில் இடம் பெற்றது.

இக் கோஷ்டியினர் பணத்தை கொள்ளையடிப்பதற்கு முன்பு, டிப்போவின் தொலைபேசி வயர்களை அறுத்து, தொடர்புகளை துண்டித்து விட்டே உட்புகுந்தனர்.

பணத்தை கொள்ளையடித்த அந்தக் கோஷ்டியினர் அங்கு இருந்த இரும்புப் பெட்டி ஒன்றையும் உடைக்க முற்பட்டனர்.

இந்த முயற்சி கைகூடாத நிலையில் அவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

## போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு சத்துணவு

### சாவகச்சேரி நகரசபை வழங்கும்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு வழங்கவென சாவகச்சேரி நகரசபையால் ஜீவாகார சத்துணவு கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்படும் ஆரம்ப சிகிச்சை நிலையங்கள் மூலம் போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது.

நகரசபையின் இவ்வாண்டுக்குரிய உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் நான்கு தடவைகள் சத்துணவுகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்க முடிவாகியுள்ளது. (ஒ-117)

## மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் புதிய மத்தியஸ்தர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பயிற்சி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி, வகுப்புக்களில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்களை சமுகம் தருமாறு சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ-29)

## 25 வருடமாக கைவிடப்பட்டிருந்த உவர் நிலங்களில் பயிர்ச்செய்கை

### 'ஏரி- 402' நெல் இனம் நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், மே 6

உவர் நிலங்களில் பரீட்சார்த்த நெற் செய்கை வெற்றி அளித்துள்ளது.

கடல் நீர் உட்புகுவதாலும் —

கோடை காலத்தில் மண் அரிப்பு ஏற்பட்டு உப்புச் செறிந்த மண் காற்று மூலம் நெல வயல்களில் பரவுவதாலும் —

கோப்பாய் கடல் ஏரியை அண்மித்த பகுதி வயல்கள் உவர் நிலங்களாக மாறின.

இதனால் சுமார் 800 ஏக்கர் வயல் நிலங்களில் கடந்த 25 வருடங்களாக நெற் செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

எனினும் இந்நிலங்களை நெற் செய்கைக்கு உட்படுத்த வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று விவசாய ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 93 — 94 ஆம் ஆண்டு காலபோகத்தில் பரீட்சார்த்த நெற்செய்கையை மேற்கொண்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கோப்பாய் பிரதேச செயலகம், கோப்பாய் வடக்கு மத்திய பகுதி விவசாயிகள், கமநல சேவை திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இது மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் தொடர்ந்து 94 — 95 ஆம் ஆண்டு கால போகத்திலும் பரீட்சார்த்தமாக அரை ஏக்கர் காணியில் ''ஏரி 402'' நெல் இனம் மட்டும் செய்கை பண்ணப்பட்டது.

ஏக்கருக்கு 52 புசல் என்ற ரீதியில் விளைச்சல் பெறப்பட்டது.

''ஏரி 402'' நெல் இனம் ஓரளவு உவர்தன்மையை தாங்கி வளரும் தன்மையை கொண்டுள்ளமையும் —

மாதாந்த மண் பரிசோதனைகள் மூலம் உப்பு செறிவு குறைந்த மண்ணுடைய வயலை தெரிவு செய்தமையுமே இவ் விளைச்சலுக்கு காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரு வருடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் மூலம் இனி வரும் கால போகத்திலும் மேலும் அதிக விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு இலவச உள்ளீடுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிய வந்துள்ளது. (இ-14)

# தமிழீழத் தாயகத்தை மீட்டெடுப்பதற்கு போருக்கு அணிதிரள தமிழருக்கு அழைப்பு

மீண்டும் போர் மூண்டுவிட்டது; உலகம் வியக்கும் வெற்றிகளோடு. மீண்டும் யுத்தம் தொடங்கிவிட்டது; நிலம், கடலோடு வானிலும்... எங்குமே; பகைவன் கால்வைத்த இடங்களிலெல்லாம் களம் திறந்துவிட்டனர் புலிகள்; உங்கள் பிள்ளைகள்!

இந்த வேளையில் ஒவ்வொரு தமிழனையும் அல்லது தமிழச்சியையும், தாயகத்தின் சுதந்திரத்திற்கான இந்த உச்சப் போரில் இணையுமாறு கோருகின்றோம். தனது மடியில் பிறந்த ஒவ்வொரு தனிமனிதனையும் நோக்கி எங்கள் தாய்த்திருநாடு போர்க்குரல் எழுப்பி அழைக்கின்றது; புறப்படுங்கள்!

இது போருக்கான அழைப்பு! யுத்தத்திற்கான அறை கூவல்!! ஒருவர்கூட மிச்சமின்றி அத்தனை பேரும் புறப்படுங்கள். ஏனெனில் இதுதான் இறுதிப் போராகவும் இருக்

> விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' சித்திரை மாத இதழில் ''தேசத்தின் குடிமக்களுக்கோர் பகிரங்க அறைகூவல்'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

கலாம்; இனித் தமிழீழம்தான். இன்றுவரை நாங்கள் தரைப் பகுதிகளை மீட்கவே போராடினோம்; இன்றிலிருந்து நாங்கள் தமிழீழத்தையே மீட்டெடுக்கப் போராடுவோம். அனைவருமே அணிதிரள்க.

தேசத்தின் இளம் புதல்வர்களே! மண்ணின் புதிய சந்ததியே!

எங்களுடைய நாட்கள், வரலாற்றில் மிக முக்கியமான ஒரு காலகட்டம்; தமிழரின் சரித்திரத்திலேயே அதி சிறப்பு வாய்ந்த ஒரு காலப்பகுதி இது. பழம்பெரும் பாரம்பரியப் பெருமைகள் நிறைந்த எங்கள் இனம், தனக்கென ஒரு அரசை நிறுவப் போர் செய்கின்ற ஒரு பொற்காலத்தில் பிறந்ததும், வாழக்கிடைத்ததும் எமது தலைமுறை பெற்ற ஒரு பெரும்பேறு என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த நேரத்தில்— இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் எங்களால் ஆற்றக்கூடிய ஆகக்கூடுதலான தேசப்பணியை வழங்குமாறு, வரலாறு எங்களை அழைக்கின்றது.

எங்களைப் பெற்றெடுத்த அன்னைநிலம் ஒரு தமிழனாக அல்லது தமிழச்சியாகப் பிறந்ததற்கான கடமையைச் செய்யுமாறு எங்கள் ஒவ்வொருவரது மனச்சாட்சியை நோக்கியும் அறைகூவல் விடுக்கின்றது.

எமது நிலம், எமது இனம், எமது மொழி, எமது பண்பாடு, எமது கலை, எமது பாரம்பரியம், எமது விழுமியங்கள்; எமது வீரம்... இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்தமான பாதுகாவலர்களாக அழிவின் விளிம்பிலிருந்து இவை அனைத்தையும் மீட்டெடுக்கும் இரட்சகர்களாக— சரித்திரம் எமது சந்ததியைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றது.

எமது மக்களின் வாழ்வியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும், எமது தேசத்தின் போரியல் பலத்தை உறுதிப்படுத்தும், எமது இனத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பாக்கியம். எமது தலைமுறைக்குத்தான் கிடைத்துள்ளது; இது ஒரு சரித்திரப் பெருமை

தமிழினத்துக்கென்றொரு தனி இராச்சியத்தை நிர்மாணிக்கும் வரப்பிரசாரத்தை— வரலாற்றுப் பணியை— எமது சந்ததிதான் பெற்றுள்ளது. இது ஒரு சாதாரண விடயமல்ல.

இன்றைய காலம் எங்களுடையது; இந்தப் புதுயுகத்தின் நாயகர்கள் நாங்களேதான.

நாங்களே எம் தேசத்தின் பலம்; நாங்களே எம் இனத்தின் மீட்சி; நாங்களே எமமக்களின் சுபிட்சம். இதுதான் எமது தலைமுறையின் உன்னதம்.

எமக்கு முன்னால் வாழ்ந்துவிட்டுப்போன எந்தச் சந்ததிக்கும், எமக்குப் பின்னால் வாழப் போகின்ற எந்தச் சந்ததிக்கும் கிடைக்காத- கிடையாத- ஒரு பெரும் பேறு, எமது சந்ததிக்குக் கிடைத்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த சந்ததி மீதும் நாம் சுமத்த வேண்டாம்; மாறாக, எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்கட்டும்.

எனவேதான், அத்தனை பேருமே யுத்தத்திற்குப் புறப்படுங்கள்!

விடுதலைக்காக உழைத்தல் என்பது ஒரு தேசியக் கடமை; அதில் ஒவ்வொருவருக்குமே பங்குண்டு அது. ஒட்டுமொத்தமாக எங்கள் இனத்திற்கு உள்ள ஒரு கூட்டுப்பொறுப்பு தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரின் மீதும் வரலாற்றின் நிர்ப்பந்தமாக இது உள்ளது இந்தத் தேசியக் கடமையை எம்மில் எவருமே தட்டிக் கழித்துவிட முடியாது; தலையாய பணியாக ஏற்று. அதனை ஆற்றி முடிக்க வேண்டிய கடப்பாடு எங்கள் ஒவ்வொருவரையுமேதான் சாரும்.

தேசபக்தியோடும், இனப்பற்றோடும், சுதந்திர வேட்கையோடும் அனைவரையும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு இணையுமாறு நாடு அழைக்கின்றது பகிரங்கமாக, நேரடியாக, எந்தவித மறைமுகமுமற்ற வெளிப்படையாக- யுத்தத்தில் பங்கேற்குமாறு - ஒவ்வொரு பிரஜையையும் நோக்கித் தாயகம் அறை கூவல் விடுக்கின்றது.

புலிகள் இயக்கமே எமது முன்னணிப்படை முழுத்தமிழினத்தின் சார்பிலும் இந்தச் சுதந்திரப் போரைத் தலைமையேற்று வழி நடத்துகின்ற தேசியப்படை நாங்கள். அத்தனை பேருமே புலிகளோடு அணிவகுக்க வேண்டிய வேளை இப்போது வந்துவிட்டது ''தமிழீழம்'' என்ற ஒரே இலட்சியத்தின் கீழ் முழுத்தமிழினமும் ஒன்றிணைய வேண்டியதே இன்றைய தேவை காலத்தின் கர்ச்சனையாக அந்த அசரீரி முழங்குகின்றது.

இந்தத் தருணம் தவறவிடப்படுமானால், வரலாறு எங்களைத் தூற்றும்; சரித்திரத்தின் பழிச்சொல்லுக்கு நாங்கள் ஆளாகுவோம்

அதனால், இன்றே எல்லாரும் போர்க்கோலம் பூணுங்கள் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், போராட்டமே எம் வாழ்க்கையாகவும் வாழ்க்கையே எம் போராட்டமாகவும் ஆகிவிட்டது இந்த நியதியை எம்மில் எவருமே அசட்டை செய்து ஒதுக்கிவிட முடியாது.

சுதந்திரத்தை நாங்கள் வென்றெடுக்காது போனால், அடிமைகளாக அவமானப்பட்டு வாழ வேண்டும்; கையேந்தி நின்று தலை குனிந்து வாழவேண்டும்; பயந்து பயந்து பதற்றத்துடன் வாழ வேண்டும்; படிப்படியாக அழிந்து போக வேண்டும். ஆகவே, சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமே இல்லை.

சிங்களப் பேரினவாதப் பிசாசு இறங்கி வந்து, ஒரு போதுமே எமக்கு உரிமைகளைத் தந்துவிடப் போவதில்லை என்பதைத்தான், வரலாறு எங்களுக்குக் கற்பித்து நிற்கின்றது. எனவே, எது நடந்தாலும், யுத்தத்தில் வெல்லும் வரையும் நாங்கள் போரடுவோம்; இரத்தச் சகதியின் மீதெனிலும் நாம் [illegible] படுத்துவோம்.

எங்களது [illegible] பேரினவாதத்துடன் 'சமரசம்' அல்ல. எங்களது நோக்கம் 'தனியரசு' தான்; சிங்கள ஆட்சிக்குக் கீழொரு 'சிற்றரசு' அல்ல.

ஒன்றிணைந்து போராடுவோம்; துணிந்து போராடுவோம்; இடைவிடாமல் போராடுவோம்; இலட்சியத்தை அடையும் வரையும் போராடுவோம்.

''மற்றவர்கள் போராடுவார்கள்; அடுத்தவர்கள் சண்டை பிடிப்பார்கள்'' என்று, எமது கூட்டுப்பொறுப்பிலிருந்து எல்லாருமே விலகி விடுவோமானால், கடைசியில் எவருமே போராடப் போவதில்லை.

எதிரியின் படையில் ஆயுதபாணிகளின் மொத்தத் தொகை ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் என்பதை, நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால் தமிழர் படையில்...?

> **நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், போராட்டமே எம் வாழ்க்கையாகவும் வாழ்க்கையே எம் போராட்டமாகவும் ஆகிவிட்டது. இந்த நியதியை எம்மில் எவருமே அசட்டை செய்து ஒதுக்கி விட முடியாது.**

அதிநவீன ஆயுதங்களும், மிகச் சிறந்த தந்திரோபாயங்களும் இருந்தாலும் ஆட்கள் இல்லாத அவற்றால் ஏது பயன் ......? அவை தாங்களாகச் சண்டை பிடிக்க மாட்டா என்பதை. நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

எதிரியின் பலத்துக்கு மிகையான பலத்தைப் பெற்றால் மட்டுமே, போர்க்களத்தில் நாங்கள் வெற்றி வாகை சூட முடியும்; யுத்தத்தில் வென்றால் மட்டுமே எமது இனம் பய பீதியற்றும், பிரச்சினைகளற்றும் வாழ முடியும்

எனவே, எமது தேசத்தின் படைவலுவுக்கு மேலும் பலம் சேர்க்க, நாம் ஒவ்வொருவருமே போருக்குப் புறப்படுவோம். இந்த யுத்தம், தாயக தேசத்திற்குப் பணிசெய்ய நாம் பெற்றுள்ள ஒரு மகோன்னதமான பாக்கியம்

எமக்காகப் போராடுவோம்... எம் பெற்றோருக்காகப் போராடுவோம்... எம் சகோதரர்களுக்காகப் போராடுவோம்.. எம் பிரியமானவர்களுக்காகப் போராடுவோம்...

எம் வீட்டுக்காகப் போராடுவோம்.. எம் ஊருக்காகப் போராடுவோம்... எம் நாட்டுக்காகப் போராடுவோம்... எம் இனத்துக்காகப் போராடுவோம்... தன்னைத்தானே ஆளுகின்ற— தலைகுனியாத— தமிழீழத்திற்காகப் போராடுவோம் 'தேசிய வீரர்கள்!' என்று, நாளைய பரம்பரை எம் பெயர்களை உரத்துக்கூவும்.

'தமிழீழம்' — வெறும் கனவல்ல!

புயல் கிளம்பும்! நிலம் நடுங்கும்! கடல் பொங்கும்! வானம் முழங்கும்! வாயு சுழன்றடிக்கும்! பூமி பிளக்கும்!

பிரபாகரனின் படைவீரர்களாய் அணிவகுத்து நகரும் போது, அட்டதிக்கும் அதிரும்! தமிழனின் சுதந்திர வேட்கையின் சுவாலைக்குள் சிங்களம் கருகும்! இலங்கா தேசம் இரண்டாகும்! சர்வதேசமும் வழிவிடும்! தமிழர் தேசம் தனி அரசாகும்!

'தமிழீழம்'— கனவல்ல; நாளைய நம் நாடு! (ஓ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை.

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி முதல் அரையாண்டுப் பரீட்சை -1994

மேற்குறிப்பிட்ட பரீட்சை யூன் மாதம் 19ஆம், 20ஆம் 21ஆம், 22ஆம் திகதிகளில் தினமும் பி. ப. 1-00 மணிக்கு நடைபெறும்

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து 25-05-95க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/-வீதம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

-பதிவாளர்

(சி/1155)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணாடி அலுமாரி 2x6 அடி பார்வையிடலாம். ஒட்டகப்புலம் சமத்தர் முறிவு, நோவு வைத்திய நிலையம், 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம், முன்னைய ஆசீர்வாத அச்சகம். [36499]

ஒன்றரை மாதம் நிரம்பிய பூச்சி அகற்றிய அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 222, தெல்லிப்பழை வீதி, சித்தன்கேணி (வட்டு இந்துக் கல்லூரிக்கு அருகில்) (36484)

பியோ பிரிட் கொம்புச் சனல் கிடாய் ஒரு வயது நிரம்பியது விற்பனைக்குண்டு. 127, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [8517]

10 கோர்ஸ் பவர் ஜென்மார் எஞ்சின் 5 K. V. டைனமோவுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஹோட்டல் றொலெக்ஸ் 340 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8521)

### கார் விற்பனைக்கு

புதிய பற்றறியுடன் ஓடும் நிலையிலுள்ள ஜப்பான் மிற்சுபிசி லான்சர் ஆடம்பரக் கார் விற்பனைக்கு உண்டு தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-1152]

### வீடு விற்பனைக்கு

அராலி வடக்கு இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள 3 பரப்புடனான வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். ப. ஆனந்தம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (8518)

### விற்பனையாகிறது

நீண்ட நாட்களாக வெளிவராமலிருந்த ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி (பதவுரை பொழிப்புரையுடன் கூடியது) கொன்றை வேந்தன் வாக்குண்டாம், அதிவீரராமபாண்டியனின் வெற்றிவேற்கை — மூலமும் தெளிவுரையுடன் வியாபாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் கழிவுண்டு. ஸ்ரீலங்கா புத்தகசாலை, இல 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி 1127)

### தேவை

தனியார் வைத்திய நிலையத்தில் சேவையாற்றுவதற்கு தகுதியுள்ள தாதி பயிலுநர் தேவை. 18 — 25 வயதிற்கு இடைப்பட்ட க. பொ. த (சா/த) தகைமையுள்ள பெண்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்: டாக்டர் திருமதி எஸ். இராசேஸ்வரன், பலாலி வீதி, திருநெல்வேலி. (8522)

### மணப்பெண் தேவை

காங்கேசன்துறையைச் சேர்ந்த, ஜெர்மனியில் Industrial Electronic Engineer தொழில் புரியும் 31 வயது, விரைவில் வரவிருக்கும் சித்திரை நட்சத்திர கிரக பாவமற்றவருக்கு படித்த, நற்குணமுள்ள மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். விவாகம் செய்து அழைக்கலாம். சாதகக் குறிப்புடனும் முழு விவரங்களுடனும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். இல. 789, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (36523)

### மணமகள் தேவை

36 வயதுடைய கனடாவை வதிவிடமாகவுடைய மணமகளுக்கு 31 வயதுக்குட்பட்ட பட்டதாரி CIMA A/L சித்திடைந்த மணமகன் தேவை. மணமகன் தற்போது இங்கே உள்ளார். கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யப்படும். தொடர்பு: மே/பா 48, உதயன் சேவை நிலையம் சுன்னாகம் (8338)

### காணாமல் போயிட்டது

2-5-95 இரவு கனாலியூடாக யாழ்ப்பாணம் பயணம் செய்யும்பொழுது ஒரு தொகைப் பணத்துடனான "பர்ஸ்" ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கருணை கூர்ந்து எமக்கு தந்துதவுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன். இ. இராசேந்திரம், குளமங்கால், மல்லாகம். [8344]

---

## கணக்கியல் பிரத்தியேக வகுப்பு

**A/L 97**

ஆரம்பம்: 08 — 05 — 1995
திங்கள் மாலை 5 00 மணி

**D. SAM**
76/2, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு
குறிக்கப்பட்ட மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். [36514]

---

## PERSONAL CLASS

இல. 14,
சிறாம்பையடி லேன்,
யாழ்ப்பாணம்.

**A/L 97**
**கணக்கியல்**

ஆரம்பம்:
இன்று சனி
06 05 95
ப. ப. 4-00 மணி

By
A S A.
கலைச்செல்வன்
(36540)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 — 05 — 1937
உதிர்வு: 06 — 05 — 1990

அமரர்
**நாகலிங்கம் சிவபாதசுந்தரம்**
(Formerly Deputy Director, Dept; Of Buildings)

வையகம் போற்றும் உத்தமனாக வாழ்ந்து
இல்லறத்தை நல்லறமாக நடத்தி
இறையடி சேர்ந்த அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி பிள்ளைகள்,
உறவினர்கள்.

"ஜெயபதி"
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (8519)

---

## மாவடிப் பிள்ளையார் விளையாட்டுக் கழகத்தை

# வாழ்த்துகின்றோம்

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் 1995ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20, 21ஆம் திகதிகளில் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில்

மாவடிப் பிள்ளையார்
**விளையாட்டுக்கழகம்**
மீசாலை

**முதலாம் இடம்**
பெற்றதற்காக

உற்சாகத்துடன் பங்குபற்றிய வீரர்கள், வீராங்கனைகள் அவர்களை ஊக்குவித்த கழக நிர்வாகக் குழுவினர் ஆகியோரை வாழ்த்துகின்றோம்

மீசாலை மக்கள்.
(36519)

---

ஓம் சாயிராம்

உரும்பிராய் பகவான் ஸ்ரீ சத்ய சாயிசேவா நிலையத்தினரின்

## 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், "சாயிரசம்" மலர் வெளியீடும்

காலம்: இன்று 06 — 05 — 1995 சனி
( ஈஸ்வரம்மா தினம் )
இடம்: நிலைய மண்டபம

இவ் விழா காலை 8-00 மணி தொடக்கம் ஓங்காரம், கொடியேற்றம், பாதபூசை, சாயிரசம் மலர் வெளியீடு, சிறப்புரைகள், யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவர்களுக்கான 10 வகுப்பறைத் தடுப்புகள் (Screens) வழங்கல் நடனம், "சாயிரசம்" இசைச்சொற்பொழிவு, நாடகம் பஜனை என்பன நடைபெற்று பி ப 5-30 மணியளவில் மகா மங்கள ஆரத்தியுடன் இனிது நிறைவுற குருவருள் கைகூடியுள்ளது.

### பகவானின் புகழேத்தும் உரைஞர்களும், இசைஞர்களும்

1. சைவப்புலவர் பொன். தெய்வேந்திரம் அவர்கள்
2. சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் அவர்கள்
3. திரு S சிவஞானம் (மத். இணை. அ இ. ச. சா நிறு.) அவர்கள்
4. திரு S. விஜயரட்ணம் (வட பிரா. ச. சா. நிறு. தலைவர்) அவர்கள்
5. பேராசிரியர் S. சிவஞானசுந்தரம் (நந்தி) (மரு பீட. யா ப. கழகம்) அவர்கள்
6. முதன்மை ஆசிரியர் ஸ்ரீ தயாளன் அவர்கள்
7. திருமதி ம சரவணபவன் (ச. சா. நிறு. கல்வி இணைப்பாளர்) அவர்கள்
8. ஆசிரியர் செ. ஜயாத்துரை (ஞா. சம். இல்லத் தலைவர்) அவர்கள்
9. அன்னைதாசன் க. ஆனந்தராசா ஆசிரியர் அவர்கள்
10. டாக்டர் செ. சிதம்பரநாதன் அவர்கள்
11. ஊரெழு மண்டலியினர்

**பக்கவாத்தியங்கள்:**

மிருதங்கம்: செல்வன் ஆ. கோகுலன் அவர்கள்
ஆமோனியம்: திரு. T. சற்குருநாதன் அவர்கள்

கூட்டமாய் வருக, புகழ் நுகர்க.

(36531) ச. சா. சே. நிலையத்தினர்.

---

## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K S. வீதி, கொக்குவில்.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் விஞ்ஞானம் சித்தியடைய தவறிய மாணவர்களுக்கும், தற்போது க.பொ.த. சாதாரணம் கற்கும் மாணவர்களுக்குமான

விஞ்ஞான விசேட வகுப்புக்கள்

இரா. செல்வவடிவேல்
திங்கள், வெள்ளி மாலை 6-00 — 7-00

A. K. மூர்த்தி
சனி, ஞாயிறு 6-45 — 7-45

M. இராமநாத்
செவ்வாய், வியாழன் 5-00 — 6-00

ஆரம்பம்: **6 - 5 - 95**
[சி-1354]

---

## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K.. S. Road, கொக்குவில்.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் சித்தியடைய தவறிய மாணவர்களுக்கும் தற்பொழுது க. பொ. த. சாதாரணம் கற்கும் மாணவர்களுக்குமான விசேட வகுப்புக்கள்

ஐ. புவனேந்திரன் B, A. Dip - in - Ed.

ஆரம்பம்: **08 - 05 - 1995**
[ திங்கள் ]

நேரம்; மாலை 4-00 — 5-00
திங்கள், வெள்ளி மாலை 4-00 — 5-00
வகுப்புக்கள் நடைபெறும்.
(சி-1357)

---

## 31 ஆம் நாள் நினைவலையும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**அன்னைகஸ்தூரிபாய் (ராணி) துரைரத்தினம்**

அன்னைமடியில்: 31 — 03 — 1945
ஆண்டவன் அடியில்: 07 — 04 — 1995

அன்புத் தாயே!
உங்களை எப்படி நாம் மறப்போம்
உங்கள் அம்மாவுக்கு எப்படி ஆறுதல்
அம்மம்மா எனக் கேட்கும் எம் குழந்தைகளுக்கு
என்ன கூறுவோம்
எம்மை இவ்வுலகில் பெற்று வளர்த்து ஆளாக்கிய
நீங்கள் இருவரும் ஒருவர் பின் ஒருவராய்
ஆறு வருட கால இடைவெளியில் எமை விட்டுச்
சென்று விட்டீர்கள் உங்கள் கடமைகள் முடிந்த
தென்றா பூவுலக வாழ்வைத் துறந்து விண்ணுலகம்
சென்றீர்கள் அன்பாய், பண்பாய், பாசமாய் — வளர்த்து
குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தீர்கள் இவற்றை
எல்லாம் மறந்து எங்கே ஓடி மறைந்தீர்கள்.

எமதருமைத் தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07 - 05 - 1995) ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் அஸ்தி சேர்க்கப்படும். மதியம் வீட்டுக் கிரியைகள் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இதில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


நன்றி

உங்கள் நினைவாக வாழும்,
அம்மா. பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊறணி,
வல்வெட்டித்துறை. [சி-1154]

---

## 19 ஆவது நினைவஞ்சலி / 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா சின்னத்துரை**
[இளைப்பாறிய ஆசிரியர்]
தோற்றம்: 04 — 02 — 1915
மறைவு: 29 — 02 — 1976



திருமதி
**செல்லம்மா சின்னத்துரை**
தோற்றம்: 06 — 08 — 1921
மறைவு: 18 — 04 — 1994

அரணம் பொருள் என்று அருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெருமானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நயன் தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

அயராது உழைத்து எமையெல்லாம் உயர வைத்த தெய்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்:
பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (8520)

---

## நாலாண்டில் நாம் நினைத்தோம்



அமரர் (...)
**அருட்திரு லோ. வ. இராயப்பு**
அ. ம. தி

அன்னை தன் மடியில்: 02 07 - 1929
அமலன் திரு அடியில்: 06 - 05 - 1991

பலகலையும், பலமொழியும், பலஆய்வுப் பட்டமதும் வலவனென மறைஞான வாண்மையதும்-கலகலக்கும் மாவறிஞன் இராயப்பின் மறுகணைந்து உனதடியின் காவலிலே கர்த்தாவே காக்.

சகோதரன், சகோதரிகள்

(36510)

உதயன்
802/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## பேச்சை முறித்தது அரசே!

இந்தத் தராறில் நிரந்தரமாக நிலைத்து நிற்கக் கூடிய இராணுவத் தீர்வு ஒன்று இருக்கும் என்று நாங்கள் நம்பவில்லை—

சமாதானத் தீர்வைத் தொடர்ந்தும் தேடுவோம். பேச்சுவார்த்தைகளை நாளை தொடங்குவதானாலும் நாம் அதற்குத் தயார்—

ஆனால் எதைப்பற்றிப் பேசப் போகிறோம் என்பது பற்றிய தெளிவான புரிந்துணர்வுடன் தான் இனிப் பேச்சுவார்த்தை தொடங்கப் பட வேண்டும்—

விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை இவற்றுள் ஒன்று பூநகரியில் உள்ள இராணுவ முகாம் அகற்றப் படுவது—

பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு இந்த நிபந்தனைகள் முன் வைக்கப் படுமானால் பேச்சுக்களை மீண்டும் தொடங்க முடியும் என்று நான் நினைக்கவில்லை—

ஸ்ரீலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இந்தியாவில் நடைபெற்ற ''சார்க்'' மாநாட்டுக்குச் சென்றிருந்த சமயம், பி.பி.ஸியின் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாக, குழம்பிய நிலையில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அமைச்சர் கதிர்காமர் தெரிவித்த தகவல்களில் இருந்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இலகுவில் புரிந்து கொள்ளலாம்!

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை. எதனைப் பேசுவது என்பது தெரியாத அரசாங்கம் எவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தும்?

எனவே அரசு உடனடியாக இராணுவத் தீர்வையே நாடப்போகிறது என்பது வெளிப்படை. விமானப்படையின் நடமாட்டமும் வான் பரப்பில் முடக்கப்பட்டு விட்டதால், அதனைச் சீராக்கி போராடுவதற்கான தயார் நிலையை எய்தும் வரை ''பேச்சுவார்த்தைக்குத் தயார்'' என்ற மந்திரத்தை வெறுமனே அரசு உச்சரித்துக் கொண்டிருக்கும்!

தனது முப்படைகளுக்கும் மேலாக விடுதலைப் புலிகளின் சக்தியும், போர் வலிமையும் உயர்ந்துவிட்டதால், அந்தளவுக்குத் தன்னை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் அது இப்போது அவசர அவசரமாகவும், தீவிரமாகவும் ஈடுபட்டிருக்கிறது. தான் தனித்து நின்று விடுதலைப் புலிகளுடன் போராடுவது கடினம் என்பதனை உணர்ந்து இந்தியாவிடம் உதவியும் கோரியிருக்கிறார் சந்திரிகா.

அந்த உதவிகள் கைக்கு வந்ததும், போரைத் தீவிரப் படுத்தி, விடுதலைப்புலிகளை நசுக்கி விடலாம். அதன் பின்னர் தமிழர் தாயகத்தில் சிங்கள அடக்கு முறையை வேரூன்றச் செய்யும் தீர்வு ஒன்றை தமிழர்கள் மீது திணிக்கலாம் என்பதே சந்திரிகாவின் உள்நோக்கமாக இருக்கிறது.

இந்த உள் நோக்கத்தை வைத்துக் கொண்டே விடுதலைப்புலிகள் முன்வைத்த கோரிக்கைகளை, நிபந்தனைகளாக வர்ணித்து அவற்றை நிறைவேற்ற அரசு பின்னடித்தது. அந்தப் பின்னடிப்பும், நிராகரிப்பும் பேச்சுவார்த்தைகளை முறித்து விடுவதற்கு அரசாங்கம் போட்ட திட்டம் என்பது இப்போது நன்கு புரிகிறதல்லவா?

தான் பேச்சுவார்த்தையை முறிக்கவில்லை; விடுதலைப் புலிகளே விலகிக் கொண்டார்கள் என்று காட்டுவதற்காக, அதற்கான சூழ்நிலையை வேண்டுமென்றே அரசு தோற்றுவித்தது புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில் அவர்கள் பேச்சுக்களில் இருந்து விலகுவார்கள் என்பது தெரிந்து இவ்வாறு செயற்பட்ட அரசு இனியும் தான் நல்லபிள்ளையாகக் காட்டிக் கொள்ளவே தொடர்ந்தும் பேச்சுவார்த்தை என்ற மந்திரத்தை சதா ஓதிக்கொண்டிருக்கிறது!

## கிழக்கில் படையினருக்கு பஸ், ரயில் பயணத்தடை

கொழும்பு, மே 6

கிழக்கில் கடமையாற்றும் முப்படையினரும் பொலிஸாரும் விடுமுறையில் செல்லும் போது பாதுகாப்பு இல்லாமல் பஸ், ரயில் ஆகியவற்றில் பிரயாணம் செய்யக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த படையினருக்கே இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருப்பதாக இராணுவ தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதன் காரணமாகவே இத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ஒ)

## சமாதான முயற்சியிலிருந்து பின்வாங்க மாட்டோம்

### அமைச்சர் தர்மசிறி கூறுகிறார்

கொழும்பு, மே 6

எந்த யுத்த காலத்திலும் நாம் சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்க மாட்டோம். யுத்தம் புரிவது எமது கொள்கையல்ல.

தகவல் தொடர்பு சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விமான அழிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தத்தையும் கொலையையும் அனைவரும் கண்டிக்க வேண்டும். சகலரும் விழிப்புணர்வுடன் ஆத்திரமூட்டும் சம்பவங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் அதேவேளை சமாதான குறிக்கோளை கைவிடக் கூடாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

[ஒ-14]

## யாழ்- மூளாய் பஸ்ஸில் பயணிகள் பெரும் சிரமம்

சண்டிலிப்பாய், மே. 6

யாழ் நகரிலிருந்து மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம் ஆகிய இடங்களுக்கு ஊடாக மூளாய் வரை நடத்தப்பட்டு வரும் 782 இலக்க மினி பஸ் சேவையில் பிரயாணிகள் அதிகளவு ஏற்றப்படுவதால் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

முற்பகலிலும், பிற்பகலிலும் மக்கள் கூட்டம் இந்தப் பஸ்களில் நிரம்பி வழிகின்றது.

சில சமயங்களில் கால் வைத்து நிற்க முடியாதளவுக்கு பிரயாணிகள் ஏற்றப்படுவதால் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்கள் பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றனர்.

காலை, மாலை, வேளைகளில் என்றாலும் பிராயாணிகளின் நலன் கருதி அதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு அவர்கள் வேண்டுகின்றனர்.

[ஒ-135]

## மலரும் தமிழீழத்தின் நிர்மாணிகள் சிறார்களே

### வண. பிதா யோசப் உரை

யாழ்ப்பாணம், மே 6

மலரப் போகும் தமிழீழத்தின் தூண்களான சிறார்களை சிறந்த தேச நிர்மாணிகளாக உருவாக்கும் சீரிய பணியை காந்தருபன் அறிவுச் சோலை போன்ற அமைப்புக்கள் சிறப்பாக மேற் கொண்டு வருகின்றன.

— இவ்வாறு தெரிவித்தார் வண. பிரான்சிஸ் யோசப் அடிகள்.

—காந்தருபன் அறிவுச் சோலையின் உறுப்பினர் பொதுக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி காந்தருபன் அறிவுச்சோலை மண்டபத்தில் நடைபெற்றது.

அக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் வலிந்து சென்று உதவும் இத்தகைய சமூக சேவை அமைப்புகளின் பணி போற்றுவதற்குரியது யுத்தம் நடைபெறும் பகுதிகளில் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் கொடுமையானவையாகும். அதற்கு உரிய நிவாரணம் அவசியமாகும் என்றார்.

கூட்டத்தில் காந்தருபன் அறிவுச் சோலையின் புதிய ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஐ-5)

# பாதுகாப்பு கெடுபிடிகள் மட்டு நகரில் அதிகரிப்பு!

## வீதிகள் போக்குவரத்துக்கு தடை

கொழும்பு, மே 6

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு அருகில் கடந்த செவ்வாயன்று சைக்கிளில் குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகச் செல்லும் திருமலை வீதி — கோட்டைமுனைப் பாலத்திற்கு அருகில் இருந்து ரயில் நிலைய வீதிச் சந்தி வரை — போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

கல்முனையில் இருந்து மட்டக்களப்புக்கு செல்லும் வாகனங்கள் அரசடி சந்தியூடாக பார் வீதிக்கு செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனையில் இருந்து செல்லும் வாகனங்கள் அருணகிரி ஒழுங்கை அல்லது புதிய பாலத்தினூடாகவே நகரப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

### போக்குவரத்து நெருக்கடி

பொலிஸாரின் இந்த புதிய உத்தரவுகளைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரில் பெரும் வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

திருமலை வீதி, பார் வீதி பகுதியில் உள்ள வியாபார நிலையங்கள் வெறிச்சோடி உள்ளன. தமக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட பார் வீதி பகுதியிலேயே செலான் வங்கி, தனியார் வைத்திய சாலை என்பனவும் நகரின் எரிபொருள் நிரப்பு நிலையங்களும் உள்ளன.

### ஒருநேரப் பாடசாலைகள்

இதேவேளை பதற்றமான சூழ்நிலையை அடுத்து மட்டக்களப்பு நகரில் ஒருநேரப் பாடசாலைத் திட்டம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மாலை 5 மணியுடன் மட்டக்களப்பு நகரம் வெறிச்சோடிவிடுகிறது. சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதால் மாலையானதும் வீதிகளில் நடமாட மக்கள் அஞ்சுகின்றனர்.

(ஐ)

## ஓட்டோ தடம்புரண்டு இருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 6

மழை பெய்து கொண்டிருந்த வேளை வீதியில் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்று சறுக்கி தடம்புரண்டதில் இருபெண்கள் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடியில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ் ஆஸ்பத்திரி கிளினிக்குக்கு சென்று ஓட்டோவில் வீடு திரும்பிய போதே இந்த விபத்து ஏற்பட்டது நல்லூரைச்சேர்ந்த இரத்தினசபாபதி தீபகாந்தி [வயது 75] சொர்ணலிங்கம்கமலாம்பிகை [வயது 55] ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[ஒ-15]

## அதிபர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே .6

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல்களில் —

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும் —

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் —

சங்கானைக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 1 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் —

மருதனார்மடம், சண்டிலிப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3 30மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும்.

(ஒ 4)

## கம்பன் விழாவில் நாளை

யாழ்ப்பாணம், மே 6

நல்லூர் கந்தசாமி கோயில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்ட விழாப்பந்தலில் நடைபெறும் கம்பன் விழாவில் மூன்றாம் நாளான நாளை ஞாயிறு காலை நிகழ்வுகள் 9 30மணிக்கு வண. பிதா நீ. மரியசேவியர் அடிகள் தலைமையில் ஆரம்பமாகும்.

காலை நிகழ்வுகளின் சிறப்பம்சமாக குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமையில் கலைநெறி அரங்கம் இடம் பெறும்.

மாலை நிகழ்வுகள் 4.30 மணிக்கு திரு. சி. சிவசரவணபவன் [சிற்பி] தலைமையில் ஆரம்பமாகும் மாலையில் சிறப்பம்சமாக கலாநிதிகாரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் ''எண்ணங்கள் விரிந்து எங்கள் இதயங்கள் பேச வண்ணங்கள் தலைப் பாகட்டும்'' என்னும் பொருள் பற்றி கவியரங்கம் இடம் பெறும்.

(ஒ-14-111]

## மருந்துவகை பறிமுதல்; இராணுவம் கெடுபிடி!

யாழ்ப்பாணம், மே 6

வடபகுதி பயணிகள் அதிகளவில் எடுத்துவரும் மருந்து வகைகளை வவுனியா சோதனை நிலைய இராணுவத்தினர் பறி முதல் செய்கின்றனர்.

இதனால் வடபகுதி ஆங்கில மருந்துவர்த்தகர்கள் தமக்குத் தேவையான மருந்து வகைகளை வடபகுதிக்குள்கொண்டுசெல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஆங்கில மருந்து வர்த்தக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் இவ்வகையான அடாவடித்தனமான நடவடிக்கைகளால் அடுத்த சில மாதங்களில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் இருப்பதாக அஞ்

(ஒ-4]

## பாடசாலைகளில்

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

(ஒ-14)

## காபூலில் இந்திய தூதரகம்

காபூல், மே 6

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இந்தியா மீண்டும் தனது தூதரகத்தை திறந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக 16மாத காலங்கள் தூதரகம் மூடப்பட்டிருந்தது.

இந்திய தூதரகம் திறக்கப் பட்டுள்ளது ஆப்கானிஸ்தானில் இயல்புநிலை தோன்றியுள்ளமைக்கு சான்றாக அமைகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-14)

## ராணுவ நடமாட்டம் இருப்பதால் விவசாயிகள் எள் அறுவடை செய்ய முடியாது அவதி!

சண்டிலிப்பாய், மே 6

மாதகல் கரையோரமாக சில்லாலை தும்பளப்பாய் வயல் வெளியில் எள்ளு பயிரை உற்பத்தி செய்த விவசாயிகள் தற்போதைய நிலை காரணமாக அப்பகுதிக்கு சென்று அறுவடை செய்ய முடியாது திண்டாடுகின்றனர்.

எள்ளுப் பயிர் நன்கு முற்றி அறுவடைக்கு தயாராக இருப்பதாகவும், ஆனால் சமீப நாட்களாக அப்பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாலும், இடைக்கிடை மாதகலில் இருந்து அப்பகுதியை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வருவதாலும் எள்ளை அறுவடை செய்ய முடியாது இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

[ஒ-135]

## விளையாட்டு நிகழ்வுகள்

கொழும்புத்துறை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம்வருமாறு:-

★ முற்பகல் 9 மணி — நாவாந்துறை கலைவாணி வி.க அணி எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் வி.க ''ஏ'' அணி.

★ முற்பகல் 9 30 மணி:- அரியாலை ஐக்கிய வி.க ''வைற்'' அணி எதிர் சென். அன்ரனீஸ் வி.க அணி.

★ முற்பகல் 10 மணி — சென். நீக்கிலஸ் வி.க அணி எதிர் கொழும்புத் துறை மேற்கு மகளிர் வி.க. ''பி'' அணி.

★ பிற்பகல் 3 மணி — சென். றோக்ஸ் அணி எதிர் பமிலியன்ஸ் அணி.

★ பிற்பகல் 4 மணி — சென். மேரிஸ் ''பி'' அணி எதிர் யுத்காமல் வி.க அணி.

[ஐ-5]

★ ★ ★

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் மாவட்டரீதியான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 8 ஆம் இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டம் இன்று யாழ். மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது

இன்றைய ஆட்டத்தில் யங் ஹென்றீஸ் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய வி.க அணி மோதும்.

[ஐ]

## விமான சிதைவுகள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், மே 6

விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட 'அவ்ரோ' விமானத்தின் சிதறிச் சின்னாபின்னமாகிய உதிரிப்பாகங்கள் மக்கள் பார்வைக்காகவியாழன் முதல் யாழ்ப்பாணம் முற்றவெளி — பழைய தபாற் கந்தோர் முன்பாக — வைக்கப்பட்டுள்ளன.

நேற்று ஏராளமான மக்கள் அவற்றைப் பார்வையிட்டனர்.

(ஒ-15]

## மிதிவெடியில் சிக்கிய மாடு

ஏறாவூர் அருகே உள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதியில் கால் நடையாகச் சென்ற பொலிஸாரைக் கண்டு மிரண்டு ஓடிய மாடு ஒன்று மிதிவெடியில் சிக்கி கால் ஒன்றை இழந்தது.

ரோந்து சென்ற பொலிஸார் பொதுமக்கள் சிலரை தம்முடன் அழைத்துச் சென்றனர்.

முன்னதாக மிரண்டு ஓடிய மாடு மிதி வெடியில் சிக்கிக் கொண்டதால் பொதுமக்கள் ஆபத்தில் இருந்து தப்பிக் கொண்டனர்.

(ஐ)

# நெருக்கடிகால ஆயுதக் கொள்வனவு திட்டம் மீண்டும் லஞ்ச மோசடிகளுக்கு வழிவகுக்கும்

தற்போது எழுந்துள்ள புதிய சூழ்நிலையை அடுத்து பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது மீண்டும் ஸ்ரீலங்காவில் மும்முரமாக ஆரம்பித்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மோதல் நிறுத்தத்தை கைவிட்டு, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகியமை உள்நாட்டு வெளிநாட்டு ஆயுத வியாபாரிகளுக்கும், அவர்களுடைய முகவர்களுக்கும் அது போலவே ஆயுதக் கொள்வனவால் பொருளாதாயம் பலன் அடையும் அரசியல் தலைவர்கள், இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகளுக்கும் பெரும் வாய்ப்பை அளித்துள்ளது.

ஆயுதப் படையினர் ஆயுதங்கள், விமானங்கள், டாங்கிகள், கப்பல்கள், கவச வாகனங்கள், ஹெலிக்கொப்டர்கள் முதலியவற்றைக் கொள்வனவு செய்ய ரஷ்யா, சிங்கப்பூர், இஸ்ரேல் முதலிய நாடுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் அங்கீகாரத்துடன் பல குழுக்களாக பறந்து கொண்டிருக்கிறார்கள்.

அதே வேளையில் வெளிநாட்டு ஆயுதத் தயாரிப்பாளர்களின் கொழும்பு முகவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு தமது ஆயுதங்களை விற்பனை செய்ய சகல முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் ரத்துச் செய்யப்பட்ட ஆயுதக் கொள்வனவுப் பேரங்கள் சில மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன.

மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் வெளியேற்றப்பட்ட ஆயுதத் தயாரிப்பாளர்களின் முகவர்கள் மீண்டும் தலைகாட்டுகின்றனர்.

ஆயுதக் கொள்வனவு செய்யப்படும் நாடுகளின் தெரிவு பற்றியும் பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

பண மோசடி தான் இந்த நாடுகளின் தெரிவுக்கான காரணம் என்று ஊகிக்கப்படுகிறது.

பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுக் கூட்டத்துக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன் ஜனாதிபதி சந்திரிகா ரஷ்யாவிலிருந்து [illegible] 32 விமானங்கள், [illegible]

ஐ — 17 VI

ஹெலிகொப்டர்கள். இரண்டு பெரிய கடற் படைப் போர்க் கப்பல்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் அளித்திருந்தார். போர்க்கப்பல்கள் ஒவ்வொன்றும் 130 லட்சம் அமெரிக்க டொலர் விலை மதிப்புடையவை.

இந்தக் கொள்வனவு பற்றிய பேச்சை நடத்த அன்சலம் பீரிஸ் தலைமையிலான விமானப் படைக் குழு ஒன்று ரஷ்யாவுக்கு ஏற்கனவே சென்றுள்ளது.

கடற்படையினரும் ஆயுதக் கொள்வனவு செய்ய ரஷ்யா, சிங்கப்பூர், இஸ்ரேல் ஆகிய

- பாரதிநேசன் -

நாடுகளுக்குச் செல்வதற்கான குழுக்களின் உறுப்பினர்கள் பற்றி முடிவெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆயுதங்களைக் கூடிய விரைவில் கொள்வனவு செய்வதற்காக கேள்விப் பத்திர (டெண்டர்) முறையைத் தவிர்த்து ''நெருக்கடிக் கொள்வனவு முறை'' கடைப்பிடிக்கப்படுகிறது.

இஸ்ரேலிடமிருந்து தாக்குதல் விமானம் [illegible] ''டிவோரா'' வேகத்தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்வதையும் ஜனாதிபதி அங்கீகரித்துள்ளார்.

இந்த விமானம் ஒவ்வொன்றினதும் விலை 39 லட்சம் அமெரிக்க டொலர்களாகும்.

கொள்வனவு செய்யப்படவுள்ள ராணுவத் தளபாடங்கள் பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

உதாரணமாக, விமானப் படை, போக்குவரத்து விமானங்களை மட்டும் கொள்வனவு செய்கிறது. வடக்கிலுள்ள முகாம்களுக்குப் படையினரையும் பொருள்களையும் எடுத்துச் செல்ல இவை தேவை என்ற போதும், தரைத் தாக்குதல் விமானங்களும் துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களும் ஏன் கொள்வனவு செய்யப்படவில்லை என்று பல இராணுவ அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இரண்டு பெரிய போர்க் கப்பல்களை ரஷ்யாவிலிருந்து கொள்வனவு செய்வதும் கேள்விக்குரியதாக உள்ளது.

ஸ்ரீலங்கா ரஷ்யாவிடமிருந்து முன்னர் ஒரு கப்பலை மட்டும் கொள்வனவு செய்திருந்தது:

''எஸ் எல் என். எஸ் சமுத்திரா தேவி'' எனும் நாசகாரிக் கப்பல் இது.

இந்தக் கப்பல் வேகமானதாகவும் நன்கு ஆயுதங்கள் பொருத்தியதாகவும்இருந்த போதும் என்ஜின்கள் அடிக்கடி பழுதடைவதால் ஒரு போதும் சரியாக செயற்பட்டதில்லை.

போரிலும் அதற்குப் பெரிய பங்கு இடையாது. போருக்கு அனேகமாக சிறிய கப்பல்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன.

### சீனாவிலிருந்து கொள்வனவு இல்லை

மேலும் கடற்படை இம்முறை சீனாவிடமிருந்து போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்ய யோசிக்கக்கூட வில்லை.

கடற்படை தற்பொழுது பாவிக்கும் கப்பல்களில் 70 சதவிதமானவை சீனக் கப்பல்களாக இருக்கும் நிலைமையில் இது ஆச்சரியத்துக்குரியது.

இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட இருக்கும் டிவோரா விமானங்கள் கிடைப்பதற்கு 6ம் மாதங்கள் பிடிக்கும். ஆனால் அவை ''நெருக்கடிக் கொள்வனவுத்'' திட்டத்தின் கீழ் வாங்கப்படுகிறன.

'நெருக்கடிக் கொள்வனவு. திட்டம் பல புதிய மோசடிகளுக்கு வழிவகுக்கும் என்று கருதப்படுகிறது.

(இ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் ஆட்கடத்தல் தற்போது அதிகரிப்பு

## வெள்ளை வானைக் கண்டால்பீதி

திருகோணமலையில் நகர்ப்புறம் தவிர்ந்த பகுதிகளில் வெள்ளை வான்களில் திரியும் ஆயுத பாணிகளால் கைது செய்யப்படும் தமிழர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான வான்களில் வருவோர் சீருடை அணியாத இராணுவத்தினரும் மாற்றுத் தமிழ்க்குழுக்களைச் சேர்ந்தவர்களும் என்று சொல்லப்படுகிறது.

விசாரணைக்கென ஆயுத பாணிகளால் அழைத்துச் செல்லப்படும் தமிழர்கள் பலர் பின் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் அங்குள்ள தமிழர்கள் பீதியடைந்து காணப்படுகின்றனர்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் நடந்தது போன்று வெள்ளை வான் கடத்தல்காரர் மீண்டும் பொ.ம ஐ.மு. ஆட்சிக் காலத்திலும் செயற்பட ஆரம்பித்துள்ளதாக பொதுமக்கள் கூறுகின்றனர். [ஓ-4]

## கடற்பகுதியில் ரோந்து இல்லை

அவ்ரோ விமானங்கள் சுடப்பட்ட சம்பவத்தை அடுத்து வடமராட்சிக் கடலில் கடற்படை ரோந்துக் கப்பல்களின் நடமாட்டம் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


நல்லூர் வடக்கு,

**விநாயகர் விளையாட்டுக் கழகம்**

நடத்தும்

**மின்னொளியில்**

மாபெரும்

**கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (SETUP)**

**அரையிறுதியாட்டம்**

காலம்: இன்று (06 - 05 - 1995) சனி இரவு 7.00 மணி

இடம்: கழக மைதானம் (சந்திர சேகரப்பிள்ளையார் கோவில் முன்பாக)

1. K.K.S. வி.க. எதிர் பாரதி வி.க.

2. அரியாலை ஐக்கிய விளையாட்டு கழகம் எதிர் ஆவரங்கால் ஐக்கிய வி. கழகம்

இறுதியாட்டம்: (7 - 5 - 95) ஞாயிறு 7.00 மணிக்கு இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வி. வி. கழகம்

நல்லூர் வடக்கு

விளம்பர அன்பளிப்பு;



S·M·FERNANDO

(சி/1156)



# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் பொன்னம்பலம்

நெடுந்தீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்பலம் அவர்கள் 24-04-1995 அன்று இந்தியாவில் காலமானார்.

அவரது இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
நா. சிதம்பரம்மா (சகோதரி)

பணிக்கர் வளவு,
திருநெல்வேலி. [36543]

## சாத்தர் சிவராசா

வேலணை கிழக்கு வங்களாவடி முருகன் கோவிலடியைச் சேர்ந்தவரும் தற்போது 443 நாவலர் வீதி, அரியாலையில் வசித்தவருமான சாத்தர் சிவராசா 4-5-95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாத்தர்-சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், புஸ்பராணி, தயாபரநாதன், விஜயராணி [மல்லிகா - கனடா] காலஞ்சென்ற இந்திராணி, மற்றும் சத்தியநாதன் (பிரான்ஸ்), திலீபநாதன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமலிங்கம், பவானிதேவி [ஆசிரியை - வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்], ஸ்ரீகாந்தன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன், சுதேவதன், அபிமன், பாமினி, பரசன், கபஷ், நிக்கோலா, தயானிஷன், வர்சினி [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று [6-5-95] காலை 9-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. தயாபரன் (சரவணை) [மகன்]

(36537)


## பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தில்

# ரஷ்ய ஆயுத கொள்வனவு: கேள்வி எழுப்பப்படும்

கொழும்பு, மே 6

சந்திரிகா அரசு பதவிக்கு வந்தவுடன் நிறுத்தி வைக்கப்பட்ட ரஷ்ய ஆயுதக் கொள்வனவைச் செய்வதற்கு இப்போது திடீர் என முடிவு செய்யப்பட்டது ஏன்?

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் அரச மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் இது விடயம் குறித்து கேள்வி எழுப்ப உள்ளனர்.

ஐ.தே. கட்சி அரசு காலத்தில் ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

காலத்துக்கு ஒவ்வாத பழைய ஆயுதங்களையும் பாவித்த ஆயுதங்களையும் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், இதில் மோசடி இடம் பெற்றதாகவும் கூறி புதிய அரசு கொள்வனவை ரத்துச் செய்திருந்தது.

அப்படியிருக்க,

முந்திய ஏற்பாட்டின் பிரகாரம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முடிவு செய்தது ஏன்? — என்று அடுத்து நடக்கவிருக்கும் பாதுகாப்பு அமைச்சு நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் கேள்விகள் எழுப்பப்பட உள்ளன.

பிரஸ்தாப குழுவின் கூட்டம் ஏப்ரல் 28 ஆம் திகதி நடைபெறுவதற்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் ஒத்திவைக்கப்பட்டு விட்டது. (அ)

## படையினர் ஆறு பேர் படுகாயம்

மட்டக்களப்பு, மே 6

மட்டக்களப்பு ஒட்டமாவடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 6 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

ஒட்டமாவடி மூக்கர்குளம் என்ற இடத்தில் தேடுதல் நடவடிக்கைகளுக்காக காலை வேளையில் சென்ற இராணுவ அணி மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். [ஐ-7]

## போராளிகள் மூவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே. 6

கடந்தமாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விடுதலை புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற நேரடி மோதலில் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்தனர்.

லெப்டினன்ட் செங்கோலன் அல்லது காமினி [பெரியசாமி நிரஞ்சன் குமார் — கிளிநொச்சி], கப்டன் புகழேந்தி [கணபதிப்பிள்ளை தவராசா - புதூர் மேற்கு] கப்டன் பூங்குன்றன் அல்லது பயூரன் [குமாரவேல் ஜெயசூரியன — நாரந்தனை வடக்கு] ஆகிய மூன்று போராளிகளுமே வீரச்சாவடைந்தனர். [ஐ-7]

## யாழ். செஞ்சிலுவையில் உலக சுகாதார நாள்

### திங்களன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 6

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை "உலக சுகாதார நாள்" அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை யாழ். போதனா வைத்திய சாலையில் செஞ்சிலுவை தொண்டர்களால இரத்த தானம் செய்யப்படவுள்ளது. பகல் 11-00 மணிக்கு சங்க கல்வி நிலையத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மன்ற சிறார் இல்லத்தில் மருத்துவர்களினால அங்குள்ள சிறார்களுக்கு இலவச மருத்துவ சேவை நடைபெற உள்ளது. இவற்றை செஞ்சிலுவை உறுப்பினர்கள், தொண்டர்கள் முன்னின்று நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## ஒட்டமாவடியில் டிராக்டர்கள் கடத்தல்

கொழும்பு, மே 6

ஒட்டமாவடியிலிருந்து வயல் உழவு வேலைகளுக்கு சென்ற ஐந்து உழவு இயந்திரங்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

ஆயுதம் தாங்கிய இனந்தெரியாதவர்கள், உழவு இயந்திர ஓட்டுநர்களை இறக்கிவிட்டு தாமே உழவு இயந்திரங்களை ஓட்டிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிரான் விவசாய நிலையத்துக்கு சொந்தமான 9 இலட்சம் ரூபா பெறுமதியான வேறொரு உழவு இயந்திரமும் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. [இ-14]

## அம்பாறை எல்லையோரம் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, மே 6

தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தின் காரணமாக அம்பாறை மாவட்ட எல்லைப்புறக் கிராமங்களுக்கு விசேட பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லக்கம குமணவிலிருந்து மகாவலி 'சி' பகுதியில் உள்ள சினுபுற பகுதி வரையான எல்லைப்புற கிராமங்களுக்கே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. [ஐ-6]

## பயணிகள் மீது படையினர் தாக்குதல்

மட்டக்களப்பு மே 6

மட்டக்களப்பு கிரான், கொம்மாந்துறை, ஏறாவூர் சோதனை முகாம் பகுதிகளில் கடந்த புதனன்று பஸ்ஸில் சென்ற பயணிகள் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

கிரானில் சுற்றிவளைப்பு நடத்திய படையினர் பல தமிழர்களைக் கைது செய்துள்ளனர். (ஐ—7)

# மகரயாழ் விருது வழங்கி கம்பன்விழாவில்கௌரவம்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவு கம்பன் விழா நேற்று பிற்பகல் வெகு விமரிசையாக ஆரம்பமாகியது.

நேற்றைய சிறப்பு நிகழ்ச்சிகளாக மகரயாழ் விருது வழங்கலும், சான்றோரைக் கௌரவித்தலும் இடம்பெற்றன.

விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமை வகித்தார். நல்லூர் வடக்கு வீதியில் அமைக்கப்பட்ட விழாப் பந்தலில் மப்பும் மந்தாரத்தின் மத்தியிலும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

மகரயாழ் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட டாக்டர் வி. து. ஜெயகுலராஜாவுக்கு அந்த விருதினை துணைவேந்தர் குணரத்தினம் வழங்கிக் கௌரவித்தார். தங்கப் பதக்கம் சூட்டப்பட்டு, ஒரு லட்சம் ரூபா பரிசிலும் வழங்கப்பட்டது.

அதனை அடுத்து மூதறிஞர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள், யாழ். ஆயர் அதி. வண தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி எஸ். ஜெயநேசன் ஆகியோர் ஆசியுரையையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரையும் வழங்கினர்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் துணைவேந்தர் மகரயாழ் விருது பெற்ற சான்றோன், கௌரவிக்கப்பட்ட மூதறிஞர்கள் ஆகியோரும் — அறிஞர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள் புடைசூழ கம்பன் திருவுருவப்படம் கம்பன் கோட்டத்திலிருந்து விழாப் பந்தலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. (அ-111)

# நாட்டில் நாளொன்றுக்கு 116 வீதி விபத்துக்கள்!

கொழும்பு, மே. 6

இலங்கையில் நாளொன்றுக்கு சராசரியாக 116 வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் தினமும் நால்வர் உயிரிழக்கின்றனர்.

இரண்டு நாட்களில் ஒரு சைக்கிள் ஓட்டி உயிரிழக்கிறார். மூன்று நாட்களில் இரு பாதசாரிகள் கொல்லப்படுகின்றனர். ஆண்டு தோறும் 41 ஆயிரத்து 964 வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன. இதனால ஆயிரத்து 560 உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் இருந்து இந்த விவரங்கள் தெரியவந்துள்ளன. [ஐ]

# தமிழ் நாட்டிலிருந்து ஆயுதங்கள், மருந்து

## இலங்கைக்கு கடத்தப்படுகின்றனவாம்

சென்னை, மே. 6

'இலங்கைக்கு தமிழ் நாட்டின் வழியாகவே ஆயுதங்களும், மருந்துப்பொருட்களும், பெற்றோலும், டீசலும் கடத்தப் பட்டுவருகின்றன'

எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாம் இதுகுறித்து மாநில அரசைப் பலமுறை எச்சரித்துள்ளதாகவும் —

ஆனால் மாநில அரசு அதை உதாசீனப் படுத்தி விட்டதெனவும் —

இந்த விடயத்தில் மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-3-7)

# தடா சட்டத்தை கைவிட நரசிம்மராவ் முடிவு

தடா சட்டம் மக்களிடையே அதிருப்தியை உண்டாக்கிவிட்டது அது தவறாக பயன்படுத்துவதை தடுக்க முடியாமல் போவதால் தற்போதுள்ள வடிவில் தொடரமுடியாது.

இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இப்படிக் கூறினார்.

புதுடில்லியில் முதலமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றும்போதே இதை அவர் தெரிவித்தார்.

தேசிய பந்தோபஸ்து தேவைகளையும் — மனித உரிமைகளையும் — நமது நாட்டுக்குள்ள கடமைப்பாட்டையும் — கருத்தில் கொண்டு சமநிலையான ஒரு நிலையையே பின்பற்ற வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தடா சட்டத்துக்கு பதிலாக கொண்டு வரப்படும் எந்தவொரு சட்டமும் நேர்மையானதாகவும் அமுலாக்கக் கூடியதுமாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார்.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய உள்துறை அமைச்சர் எஸ் பி சவான் தடா சட்டம் குறித்து மாநில அரசுகள் கருத்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தடா சட்டம் இம்மாதம் 23 ஆம் திகதி காலாவதியாகிறது. (இ-3)

# ஏழைகள் சுயதொழில் வாய்ப்புப்பெற இலங்கை வங்கி உதவி புரிகின்றது

## கடன்வழங்கும் நிகழ்வில் வங்கியாளர் உரை

"மிகவும் கஷ்டப்பட்ட நிலையில வாழும் மக்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்த இலங்கை வங்கி உதவி புரிகின்றது.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட பிரதேச முகாமையாளர் திரு. எம். சண்முகசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

மாசியப்பிட்டி மறுமலர்ச்சி சன சமூக நிலையத்தில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் வழங்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களை அவர் வழங்கி உரையாற்றினார்.

சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவர் திரு வை. இராசையாவின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பல திட்டங்களுக்காக பல்வேறு அளவுகளில் நாம் கடன்கள் வழங்கி வருகின்றோம். எனினும் உங்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவியில் நாம் பெற்ற ஆத்ம திருப்தி வேறு எதிலும் காணவில்லை. மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் வாழும் உங்களுக்கு கடன் வழங்கியதன் மூலம் உங்கள் சுயதொழில் வாய்ப்புக்கு வழி செய்துள்ளோம். நீங்கள் உயர் நிலை அடையினும் சுயதொழில் முயற்சியை கைவிட வேண்டாம்" என்றார்.

இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையால் மாசியப்பிட்டி கிராமத்தில் மரபு வழியாக களகுப்பின்னும் குடிசைக் கைத்தொழில் முயற்சியொன்று இனம் காணப்பட்டு அம் முயற்சியில் ஈடுபட்டு வரும் 306 குடும்பங்களுக்கு சுய முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது.

இக் குடும்பங்களின் சமூக மேம்பாட்டிற்காக சுன்னாகம் இலங்கை வங்கி தனது வெள்ளிவிழா ஆண்டில் அரச மற்றும் அரசசார் பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பல உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் முதற்கட்டமாக சுன்னாகம் லயன்ஸ் கழக ஆதரவில் இக்குடும்பங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள வழங்கப்பட்டன

சுன்னாகம் இலங்கை வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பி. பாலகுமார் இக் குடும்பங்களுக்கான கடனுதவி பற்றி எடுத்துரைத்தார்.

சுன்னாகம் இலங்கை வங்கியாளர் திரு எஸ். விக்னராஜா மறுமலர்ச்சி சன சமூக நிலைய தலைவர் திரு. யோகராசா, செயலாளர் திரு. எஸ். சந்தானதாஸ், இலங்கை சந்தானதாஸ், இலங்கை உத்தி வங்கி கடன் வழங்கு உத்தியோகத்தர் திரு. சச்சிதானந்தன், கிராம சேவையாளர் திரு. சிறிஸ்கந்தராசா ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (க-152)

விரைவு ஊர்வலம்———

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் வழங்கப்படும் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 37 பேரை யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதிப்பது என ஜனாதிபதி எடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே யாழ். மருத்துவ பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். [ஐ-7]

நயனம்———

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் ஏவுகணை தாக்குதல்களை முறியடித்து எதிர்கொள்ளத் தேவையான ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களையும் மற்றும் போர்த் தளபாடங்களையும் வழங்குவதற்கு தமது நாடுகள் தயாராக இருப்பதாக அந்த ராஜதந்திரிகள் அமைச்சரிடம் தெரிவித்தனராம்.

ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவிலிருந்த வேளை இச் சந்திப்புகள் நடந்ததாகவும், சம்பந்தப்பட்ட நாடுகளிடம் உதவி கோருவது குறித்து அரசு விரைவில் பரிசீலனை செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [illegible]

இ பேச்சுக்கு———

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்துவிட்டார்.

எனினும் இராணுவத்திற்கான செலவீனத்தை அதிகரிக்கும்படி அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்

தகுந்த சூழ்நிலை தோன்றும்போது அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கும் என்றும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க விடுதலைப் புலிகளுடன் நேரடியாகவோ அல்லது மூன்றாவது கட்சி மூலமாகவோ அரசு எதுவித தொடர்பும் மேற்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் கூறினார். [illegible]


# 7- ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 — 10 — 1926

மறைவு 26 — 04 — 1988

அமரர்

**மகேஸ்வரி திருநாவுக்கரசு**

[யாழ். மத்திய கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை]

ஏழு ஆண்டுகள் எப்படிப் போயின — நெஞ்சில்
என்றும் நினைவுகள் நீங்கவா போகுது
வாழும் காலத்தை வளமுளசிறாருக்காய் — கல்வி
வழங்கிய வாண்மை நீங்கவா போகுது

குடும்பத்தினர்

29/5, தேவாலய ஒழுங்கை,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (சி/1160)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292இல் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org